# சுப்பிரமணிய பாரதியார் சுட்டிய யாழ்ப்பாணத்துச் சுவாமி

நா. ஞானக்குமாரன்

**ஆய்வுச் சுருக்கம்:-**

*மகாகவி சுப்பிரமணிய பாரதியார் தனது பாரதியறுபத்தாற்றில் மூன்று சுவாமிகள் பற்றிப் பாடியிருப்பது அறிதற்குரியதாகும். குள்ளச்சாமி, கோவிந்தசாமி, யாழ்ப்பாணத்துச்சாமி என அம் மூன்று பேரும் எடுத்தாளப்படுகின்றனர். இம் மூன்று பேரில் யாழ்ப்பாணத்துச் சுவாமிகள் பற்றி பாரதியார் "ஜகத்தினிலோர் உவமையில்லா யாழ்ப்பாணத்துச்சாமிஜி என வெகுவாகப் போற்றிச் சிலாகித்துக் குறிப்பிடுவது கவனிக்கத் தக்கதாகும். இவ்வாறு பாரதியாரால் யாழ்ப்பாணத்துச் சுவாமிகள் எனக்குறிப்பிடப்படுபவர் யாரெனும் கேள்வி இந்தியாவில் உள்ள அறிஞர்கள் மத்தியிலும் இலங்கை வாழ் அறிஞர்கள் மத்தியிலும் ஆராயப்பட்டு வந்துள்ளமை காணலாம். இலங்கைக்கும் இந்தியவிற்குமிடையில் பன்னெடுங்காலமாக அறிஞர்கள், சித்தர்கள் சுவாமிகள் மத்தியில் நெருங்கிய தொடர்பு பேணப்பட்டு வந்துள்ளமை காணலாம். இவ்வகையில் யாழ்ப்பாணத்துச் சுவாமி எனப் சுப்பிரமணிய பாரதியாரால் கருதப்பட்டவர் யாரெனும் கேள்விக்கு விடைகாண முயல்வதாக இவ் வாய்வு அமைகின்றது. பாரதியார் அமரத்துவம் அடைந்து ஏறத்தாள நாற்பது ஆண்டுகளுக்குப் பிற்படவே யாழ்ப்பாணத்துச் சுவாமி யாரென்ற பிரக்ஞை இலங்கையில் அறிஞர்கள் மத்தியில் எழுந்ததென்பது குறிப்பிடத்தக்கதாகும். அதன் தொடர்ச்சியில் பல துண்டுப்பிரசுரங்கள், கட்டுரைகள், புத்தகங்கள் வெளிவந்துள்ளமை சுட்டத்தக்கதாகும். இவ்வாய்வானது இது தொடர்பான கருத்துக்களைத் தொகுத்து பகுத்தாராய்வு செய்து சுப்பிரமணிய பாரதியார் எடுத்தாண்ட யாழ்ப்பாணத்துச் சுவாமிகளை இனங்காட்ட முயல்கின்றது. இவ்வாய்வானது வரலாற்றாய்வு முறையியலையும் பகுத்தாராய்வு முறையியலையும் புத்தாக்க ஆய்வுமுறையியலையும் கைக்கொள்வதாக அமைகின்றது.*

**திறவுச் சொற்கள்:** - பாரதியறுபத்தாறு, யாழ்ப்பாணத்துச்சாமி, அருளம்பலசுவாமிகள்,

ஈழவளநாட்டினை ஞானபூமி எனக் குறிப்பிட்ட திருமூலரின் வாக்கிற்கமைய எண்ணற்ற சித்தர்கள், சுவாமிகள் வாழ்ந்து மக்களின் ஆன்மிக வளர்ச்சிக்கு வளமூட்டிய வகையில் விளங்கியமை காணலாம். இந்தியாவில் பதினெண் சித்தர்கள் முதலாக எண்ணுக்கணக்கற்ற சித்தர்கள், சுவாமிகள் வாழ்ந்திருக்கின்றார்கள் என்பது வரலாற்று உண்மையாகும். இன்றும் பலர் இலைமறை காயாக வாழ்ந்து வருகின்றனர். அது போல குறிப்பாக யாழ்ப்பாணத்திலும், மலையகத்திலும், மட்டக்களப்பிலும் பலர் வாழ்ந்துள்ளமை அறிதற்குரியதாகும். எனினும் ஈழத்தில் இவ்வாறு வாழ்ந்த சுவாமிகள் பற்றிய செய்திகள்முறையானவகையிலும்முழுமையான நிலையிலும் எடுத்தாளப்படவில்லையென்பது குறிப்பிடத்தக்கதாகும். மேலும் அறிஞர்கள், சுவாமிகள் மட்டத்திலும் ஈழத்தவர்களுக்கும் தமிழகத்தவர்களுக்குமிடையில் நெருங்கிய தொடர்பிருந்தமை காணக்கூடியதாகும். சில சித்தர்கள், சுவாமிகள் தென்னிந்தியாவிலிருந்து இங்கு வந்து தங்கியவர்களாகவும் சிலர் இங்கிருந்து தமிழகம் சென்று சில காலம் தங்கி வாழ்ந்து திரும்பி வந்தவர்களாகவும் விளங்கினர். இவ்வகையில் தமிழ் வளர்த்த அறிஞர் பெருமக்களும் உள்ளடங்குவர். இத் தன்மைக்குரிய ஒருவராகவே யாழ்ப் பாணத்துச் சுவாமிகளும் விளங்குவது குறிப்பிடத்தக் கதாகும்.

'பாரதி அறுபத்தாறில்' "ஜகத்தினிலோர் உவமையில்லா யாழ்ப்பாணத்துச் சாமி"

எனப் பாரதியாரால் எடுத்தாளப்பட்ட சாமி யாரென இனங்காண முற்பட்ட வகையில் பல்வேறுபட்ட ஆய்வுகள் சமீப காலங்களில் இலங்கையிலும் இந்தியாவிலும் எழுந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இவ்வாய்வானது இலங்கையிலும் இந்தியாவிலும் பாரதியார் எடுத்தாண்ட யாழ்ப்பாணத்துச் சாமி யாரென்ற வகையின் எழுந்த பல கருத்துக்களைத் தொகுத்து ஆராய்வதே முதன்மையான நோக்கமாக கொண்டமைகின்றது. தக்க சான்றுகளின்றி இவரே மகாகவி சுப்பிரமணிய பாரதியார் குறிப்பிட்ட யாழ்ப்பாணத்துச் சாமியென இனங்கண்ட முயற்சிகள் கற்றோர் மத்தியில் ஆய்வுக்குட்பட வேண்டியதும் அதன் வழி அவர் எவரென நிறுவ வேண்டியது இத் துறை சார்ந்தோரின் கடனாகும். இவ்வகையில் இவ்வாய்வானது வரலாற்று ஆய்வுமுறையியலையும் பகுத்தாய்வு முறையியலையும் புத்தாக்க ஆய்வு முறையியலையும் அடிப்படையாகக் கொண்டராய்வதாக அமைந்துள்ளது.

'பாரதி அறுபத்தாறு' எனும் பாடலில் பாரதியார் யாழ்ப்பாணத்துச் சாமி பற்றிப் பாடுகையில்,

**"கோவிந்த சாமி புகழ்சிறிது சொன்னேன்**
**குவலயத்தின் விழிபோன்ற யாழ்ப்பாணத்தான்**
**தேவிபதம் மறவாத தீர ஞானி**
**சிதம்பரத்து நடராஜ மூர்த்தி யாவான்**
**பாவியரைக் கரையேற்றும் ஞானத்தோணி**
**பரமபத வாயிலெனும் பார்வையாளன்**
**காவி வளர் தடங்களிலே மீன்கள் பாயும்**
**கழனிகள் சூழ் புதுவையிலே அவனைக் கண்டேன்"**
**"தாங்கத்தாற் பதுமை செய்தும் இரதலிங்கம்**
**சமைத்துமவற் றினிசன் தாளைப்போற்றும்**
**துங்கமுறு பக்தர் பலர் புவிமீதுள்ளார்**
**தோழரே எந்நாளும் எனக்குப் பார்மேல்**
**மங்களஞ் சேர் திருவிழியால் அருளைப் பெய்யும்**
**வானவர் கோன் யாழ்ப்பாணத்தீசன் தன்னைச்**
**சங்கரரெனன் றெப்போதும் முன்னே கொண்டு**
**சரணடைந்தால் அதுகண்டீர் சர்வசித்தி"**
(பாரதியறுபத்தாறு-40-41) எனவும்

இவற்றைவிட குவளைக் கண்ணன் புகழ் அடுத்து வரும் பாடலிலும் யாழ்ப்பாணத்துச் சாமி பற்றி பின்வருமாறு எடுத்தாள்வது காணலாம்.

**"மகத்தான முனிவரெல்லாம் கண்ணன் தோழர்**
**வானவரெல்லாம் கண்ணன் அடியராவார்**
**மிகத்தானுமுயர்ந்த துணிவுடைய நெஞ்சின்**
**வீரன் பிரான் குவளையூர்க் கண்ணன் என்பார்**
**ஜகத்தினிலோர் உவமையில்லா யாழ்ப்பாணத்துச்**
**சாமிதனை யிவன்னென்றன் மனைக் கொணர்ந்தான்**
**அகத்தினிலே அவன் பாத மலரைப்பூண்டேன்**
**அன்றேயப் போதேவீ டதுவே**
வீடு"(பாரதியறுபத்தாறு-43) எனவும்

உயர்வுற எடுத்தாண்ட சொல்லாட்சிகள் பாரதியார் யாழ்பாணத்துச் சுவாமி மீது கொண்டிருந்த ஆழமான, காத்திரமானநிலையை உணர்த்தவல்லதாகும். இத்தன்மையினால்தான் யாழ்ப்பாணத்தில் இருந்தவர்களும் இந்தியாவில் சிறிது காலம் தங்கி வாழ்ந்தவர்களும் பாரதி சுட்டிய யாழ்ப்பாணத்துச் சுவாமிகளோ இவர் என இனங்காண முற்பட்ட தன்மை பலரிடம் அமைந்துள்ளமையைக் காணக் கூடியதாகவுள்ளது.

அறுபதுகளில் யாழ்ப்பாணத்துச் சுவாமிகள் பற்றிய பிரக்ஞை கொண்டு பல கட்டுரைகள் வெளிவந்தமை கவனத்திற்குரியதாகும். திரு.இ.ந.கந்தசாமி என்பவர் 1961 ஆகஸ்ட் 'ஸ்ரீ லங்கா' இதழில் 'ஞானம் வளர்த்த புதுவை' எனும் கட்டுரையில் யாழ்ப்பாணத்துச் சுவாமி பற்றி கேள்வி எழுப்பியிருந்தார். இதற்கு பதிலளிக்கும் வகையில் திரு.பொ.சபாபதிப்பிள்ளை அவர்கள் 'ஸ்ரீ லங்கா' 1962 ஏப்பிரல் மாத இதழில் 'பாரதியின் ஞான குருவான யாழ்ப்பாணத்துச் சாமி' எனும் தலைப்பில்

ஒரு கட்டுரையினை வெளியிட்டிருந்தார். இக் கட்டுரைவழி வியாபாரிமூலையைச் சார்ந்த அருளம்பல சுவாமிகளே பாரதியின் ஞானகுரு எனும் வகையில் குறிப்பிட்டார். இதனைத் தொடர்ந்ததாக இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் 1963ல் அல்வாய் வடக்கு வியாபாரிமூலை அருளம்பல சுவாமிகளே பாரதியின் ஞான குருவான யாழ்ப்பாணத்துச் சுவாமி என்பதனை வெளிப்படுத்தும் வகையில் ஒரு பொதுக்கூட்டத்தினை வியாபாரிமூலையில் 07.05.1963ல் நடத்தினார்கள். இதில் முன்னாள் தமிழ்த்துறைப் பேராசிரியர் கா.சிவத்தம்பி, மற்றும் முன்னாள் தமிழ்த் துறைப் பேராசிரியர் க.கைலாசபதி போன்றோர் மேற்படி கருத்தினை இக் கூட்டத்தில் வலியுறுத்தியமை குறிப்பிடத்தக்கதாகும். இவ் விழாவினை முன்னிட்டு அன்றைய தினகரன் பத்திரிகை (07.05.1963) யாழ்ப்பாணத்துச் சுவாமிகள் நினைவிதழ் ஒன்றினை வெளியிட்டது. 09.05.1963ல் ஈழநாடு பத்திரிகையின் ஆசிரியர் தலையங்கத்தில் பாரதியாரின் ஞானகுரு யாழ்பபாணத்துச் சுவாமிகளே என வெளியிட்டிருந்தது. இதற்கு பிற்பட 15.05.1963ல் வெளிவந்த ஆத்மஜோதி மாத இதழ் பாரதியாரின் ஞானகுரு யாழ்ப்பாணத்துச்சுவாமி அருளம்பலம் எனும் கூற்றுடன் அவரது படத்தினையும் அட்டையில் பிரசுரித்திருந்ததுடன் அதன் ஆசிரியரான திரு. க. இராமச்சந்திரன் அவர்கள் அருளம்பல சுவாமிகளே யாழ்ப்பாணத்துச் சுவாமிகள் எனச் சுட்டியுள்ளார். இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தினர் கூட்டிய கூட்டத்தின் தொடர்ச்சியாக ஈழத்துச் சோமு (ஈழநாடு -5.5.63), பரசுராமமூர்த்தி (சுதந்திரன்-5.5.63), சிவஞானசுந்தம் (ஈழநாடு - 6.5.63), கைலாசபதி. க,(தினகரன் 7.5.63), சிவத்தம்பி.கா(தினகரன்-7.5.63), இராமச்சந்திரன்.க (ஆத்மஜோதி-15.5.1963), ஞானபாஸ்கரன்.க (சுதந்திரன்-19.5.1963), ஆகியோர்கள் யாழ்ப்பாணத்துச் சாமியார் தொடர்பான கருத்தாடல்களினை அன்றைய நாளிதழ்களில் வெளியிட்டமையைக் குறிப்பிடலாம்.

'ஸ்ரீ லங்கா' 1962 ஏப்பிரல் மாத இதழில் 'பாரதியின் ஞான குருவான யாழ்ப்பாணத்துச் சாமி' எனும் தலைப்பில் ஒரு கட்டுரையினை வெளியிட்ட பொ.சபாபதிப்பிள்ளை 1979ல் 'புற்றளைக்கரசே' எனும் நூலை வெளியிட்டார். இந்நூல் ஆசிரியர் சபாபதிப்பிள்ளையவர்கள் அதில் தமக்கும் அருளம்பல சுவாமிகளுக்கிடையில் இருந்த தொடர்பைச் சுட்டியதுடன் அருளம்பல சுவாமிகளே யாழ்ப்பாணத்துச் சுவாமி என்பதனை வலியுறுத்திப் பல தகவல்களை வழங்கி நின்றார். இவற்றைத் தொடர்ந்து 22.11.1981ல் வீரகேசரி இதழில் சி.மு.தம்பிராசா 'பாரதி வர்ணித்த ஜகத்தினிலோர் உவமையில்லா யாழ்ப்பாணத்துச் சாமி எனும் தலைப்பில் அமைந்த ஒரு கட்டுரை மூலம் அருளம்பல சுவாமிகளே யாழ்ப்பாணத்துச் சுவாமி என்பதனை மேலும் வலிறுத்தி நின்றார். திரு.ஆ.சபாரத்தினமும் 31.01.1982ல் வெளிவந்த தினகரன் வாரமஞ்சரியில் 'தமிழ்க் கவிதை வரலாற்றில் பாரதிக்கு முன்னும் பின்னும்' என்னும் கட்டுரையில் யாழ்ப்பாணத்துச் சுவாமிகள் அருளம்பல சுவாமிகளே எனக் குறிப்பிட்டிருந்தனர். அம்பிகைபாகனும் 07.02.1982 வீரகேசரி இதழில் 'பாரதியும் பல ஞானசித்தர்களும்- பாரதி சந்தித்த யாழ்ப்பாணத்துச் சுவாமி யார்? எனவும் இரு கட்டுரைகளை இக் காலகட்டங்களில் பிரசுரித்திருந்தார்( வீர கேசரி - 31.1.1982, 07.02.1982). இந்து கலாசார திணைக்களகத்தின் இந்து கலைக்களஞ்சியத்தின் பதிப்பாசிரியரான பேராசிரியர் பொ. பூலோகசிங்கம் அவர்களும் யாழ்ப்பாணத்துச் சுவாமிகள் வியாபாரிமூலையைச் சார்ந்த அருளம்பல சுவாமிகளே என எடுத்தாண்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

யாழ்ப்பாணத்துச் சுவாமிகள் சபையினரின் வேண்டுகோளுக்கமைய 1991ல் தொடங்கிய ஆய்வானது 'பாரதி போற்றிய அருளம்பல சுவாமிகள்' எனும் நூலாக 1992ல் யாழ்ப்பாணத்துச் சுவாமிகள் சபையினரால் வெளியிடப் பெற்றது. யாழ்ப்பாணத்துச்

சுவாமிகள் - 'சித்தர் மரபு வளத்துக்கான ஒரு பலகணி' எனும் முன்னாள் பேராசிரியர் கா.சிவத்தம்பியின் முன்னுரையான குறிப்பினையும் உள்ளடக்கியதான இந் நூல் அருளம்பல சுவாமிகளின் வாழ்க்கை, பாரதி போற்றிய யாழ்ப்பாணத்துச் சுவாமிகள், அருளம்பல சுவாமிகளின் நூல் விபரங்களும் நூற்பொருளமைவும் எனும் மூன்றம்சங்களினை உள்ளடக்கியதாக அமைந்திருந்தது (ஞானகுமாரன்.,நா-1992-42-43). இந் நூல்வழி அருளம்பல சுவாமிகள் வெளியிட்டதான பதின்னான்கு நூல்கள் பற்றி குறிப்பிட்டமை காணலாம். 'அருளம்பலம் சந்தேக நிவிர்த்தி', 'கற்பு நிலை', 'அநாதிபோதம்', 'சங்கவினாவிடை', 'சைவவினாவிடை', 'தர்க்கசாஸ்திரம்', 'அருவாசக தேவஆரம்', 'சீவதரிசி', 'நாகை நீலலோசனி அம்மன் பேரில் தோத்திரம்', 'நாகை நீலலோசனி அம்மை ஊஞ்சல்', 'கற்பு நிலைச் சுருக்கம்', 'பழைய ஏற்பாட்டுடன் படிக்கை', 'ஆதிபுராணம்', 'ஆதிநீதி', என்பன இவரால் ஆக்கப்பட்டனவாகும். 'ஆதிபுராணம்', சிலோனில்(இலங்கையில்) பிரசுரிக்கப்பட்டதாகும். 'அநாதிபோதம்', 'சங்கவினாவிடை', 'சைவவினாவிடை', 'தர்க்கசாஸ்திரம்' ஆகிய நூல்கள் கைக்குக் கிடைக்கவில்லை. இவை எங்கு வெளியடப்பட்டதென்பது அவரது இலங்கை இந்தியத் தொடர்பினை மேலும் வலியுறுத்த வல்லதாக அமையும். அருளம்பல சுவாமிகளின் நூற்களானவை அவரது ஆன்மிக அறிவனுபவத்தின் ஆழத்தினைப் புலப்படுத்துவனவாக விளங்குகின்றன. குறிப்பாக 'அருளம்பலம் சந்தேக நிவிர்த்தி' எனும் நூல் சுவாமிகளின் பரவெளிச் சிந்தனைகளையும் பரந்த நூலறிவினையும் புலப்படுத்தவல்லதாகும். இவ்வகையான ஆழ்ந்த புலமையே பாரதியாரைச் சிறப்புறப் போற்ற வைத்ததென எண்ணத் தோன்றுகிறது. மேலும் வேறெந்த சுவாமிகளும் இவ்வாறான படைப்புக்களை வெளியிட்டமையைக் காணமுடியவில்லை.

இந் நூல் வழி இதுவரை காலமும் ஆதாரப்படுத்தப்படாது எடுத்தாளப்பட்டு வந்த தவறான கருத்துக்களைத் தெளிவாக நிராகரிக்கப்பட்டு பாரதி எடுத்தாண்ட யாழ்ப்பாணத்தச் சாமி என்பவர் வியாபாரி மூலையை பிறப்பிடமாகவுக் கொண்டு புதுவையிலும் நாகையிலும் முப்பது வருடங்களுக்கு மேலாக வாழ்ந்தவரான அருளம்பல சுவாமிகளே என்பது ஆதாரப்படுத்தப்பட்டதாக அமைந்தது. மேற்சுட்டிய நூலில் பாரதி போற்றிய யாழ்ப்பாணத்துச் சுவாமி என்பதினை விரிவுற, ஆதாரங்களுடன் எடுத்தாண்டமை காணலாம் (ஞானகுமாரன்.,நா-1992-23-41). இந்நூல்பாரதியார் கையாண்ட சொற்பதங்களை துல்லியமாக எடுத்தாண்டு அவர் குறிப்பிட்ட மூன்று சுவாமிகளில் யாழ்ப்பாணத்துச் சுவாமிகள் எவ்வாறு வேறுபட்ட வகையில் பாரதியாரால் எடுத்தாளப்பட்டிருந்தார் என்பதும் பகுத்தாராயப்பட்டிருந்தமை காணலாம். மேலும் இந்நூல் வியாபாரிமூலையில் அமைந்த மேலைப்புலோலி சைவப்பிரகாச வித்தியாசாலையிலும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் வெளியிட்டு வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

யாழ்ப்பாணத்துச் சுவாமிகளான அருளம்பல சுவாமிகள் இதர சுவாமிகள் போலன்றி பதினான்கு நூல்களை வெளியிட்டவரென்பது 'பாரதி போற்றிய அருளம்பல சுவாமிகள்' எனும் நூலின் வாயிலாக வெளிப்பட்டது. இந்நூற்பட்டியலில் நான்கு நூல்கள் தவிர்ந்த ஏனையவை கைக்கெட்டிய நிலையில் அவை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்திலும் பிரதி பண்ணப்பட்டு மேல்நிலை ஆய்வுக்கு உதவும் வகையில் பேணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந் நூல்களில் 'அருளம்பலம் சந்தேகநிவிர்த்தி', 'கற்பு நிலை', 'அருவாசக தேவஆரம்', 'சீவதரிசி' ஆகியன புதுவையிலும் 'நாகை நீலலோசனி அம்மன் தோத்திரம்;, 'நாகை நீலலோசனி அம்மன் ஊஞ்சல்', 'கற்பு நிலைச் சுருக்கம்', 'பழைய ஏற்பாட்டுடன் படிக்கை', 'ஆதி நீதி' ஆகியன

நாகையிலும் பிரசுரமானவையென்பது கவனத்திற்குரியதாகும். 'ஆதி புராணம்' இலங்கையில் உள்ள காமினி அச்சுக்கூடத்திலும் பிரசுரமாகியுள்ளது. இதனை விட சில ஆக்கங்கள் கையெழுத்துப் பிரதிகளாகவே இருந்தமையினால் யாழ்ப்பாணம் இந்துசமயப் பேரவையின் அனுசரணையுடன் அருளம்பல சுவாமிகளின் 'மண்விண் வினாவிடை' எனும் தலைப்பில் இந்நூல் 2000ம் ஆண்டு பதிப்பிக்கப்பட்டு வியாபாரிமூலையில் வெளியிடப்பட்டது (ஞானகுமாரன் பேராசிரியர். நா (பதிப்பாசிரியர்) சி.வே.அருளம்பல சுவாமிகள் அருளிச் செய்த மண் விண் வினாவிடை 2000). இந் நூலில் அருளம்பல சுவாமிகளின் ஆக்கங்களான மண்விண் வினாவிடை, கலியாண அறிவிக்கை, நாச்சியார் பேரில் விண்ணப்பம்(பாடல்), முகில் பூமாதேவிக்கு புலம்பல் (பாடல்) ஆகியனவும் நாகைப்பட்டணம் ஸ்ரீலஸ்ரீ மௌன சுவாமிகள் மடாலயத்தில் அருளம்பலசுவாமிகள் மீது 1943ல் பாடப்பெற்ற 'அருள் அம்பல ஆனந்தஜோதி' பாடலும் அருளம்பலசுவாமிகள் முன்னர் பாடிய தோத்திரமும்' மீள் பதிப்பிக்கப்பட்ட வகையில் வெளிவந்தது.

இவ்வகையில் வியாபாரிமூலையைச் சார்ந்த அருளம்பலசுவாமிகளே பாரதியார் போற்றிய யாழ்ப்பாணத்துச் சுவாமிகள் என விரிவாக எடுத்தாளப்பட்ட போதிலும் காலத்துக் காலம் சில அறிஞர்கள் முன்வைத்த கருத்துக்கள் இக் கருத்துக்களை நிராகரிக்கும் வகையில் அமைந்திருந்தமை காணக் கூடியதாகவுள்ளன. இவ்வகையில் 'பாரதி கண்ட சித்தர்கள்' எனும் நூலை மார்கழி 2002ல் எழுதி வெளியிட்ட இந்திய அறிஞர் சி.எஸ். முருகேசன் அந் நூலின் ஐந்தாவது இயலில் யாழ்ப்பாணத்துச் சாமியார் என ஸ்ரீ கதிர்வேலு சுவாமிகளை எடுத்தாண்டமை குறிப்பிடத்தக்கதாகும் (முருகன்.சி.எஸ்.,2002-92-98). இக் கதிர்வேலு சுவாமிகள் யாழ்ப்பாணத்தைப் பூர்விகமாகக் கொண்டவரெனவும் வடலூர் வள்ளல் இராமலிங்க சுவாமிகளைச் சந்திக்கும் நோக்குடன் வந்தவரெனவும் குறிப்பிடப்பட்டுள்ளதே தவிர விரிவான எத்தகவல்களோ அல்லது பாரதியாருடன் அவருக்கிருந்த தொடர்புகளுக்கான சான்றுகளோ வழங்கப்படவில்லை. மேலும் ஸ்ரீ கதிர்வேலு சுவாமிகள் தைப்பூசத்தில் புதுவை பிருந்தாவனத்தில் சமாதியடைந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. சிதம்பரத்தில் உள்ள ஸ்ரீ கதிர்வேலு சுவாமிகளது சகோதரி மகனொருவரே குருபூசை நடாத்துவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் இதுவரை இலங்கையில் வாழ்ந்த சித்தர்கள், ஞானிகள் பற்றி எழுந்த நூல்கள், குறிப்புக்கள் எதிலும் இக் ஸ்ரீ கதிர்வேலு சுவாமிகள் பற்றி எத் தகவல்களும் இதுவரை கிடைத்திலது. இதே செய்தியானது சி.எஸ். முருகேசனின் மற்றுமொரு நூலான 'புதுச்சேரி சித்தர்கள்' என்பதிலும் யாழ்ப்பாணத்துச் சாமியாராக ஸ்ரீ கதிர்வேலு சுவாமிகள் பற்றிச் சுட்டப்படுவதனைக் காணலாம் (முருகேசன்,சி.எஸ்-2003-18-22). இதில் ஸ்ரீகதிர்வேலு சுவாமிகள், ஸ்ரீகதிர்வேல் சுவாமிகள் எனும் நாமம் ஒருவராகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இந் நூலில் இருபத்தாறு புதுச்சேரிசித்தர்களில் ஒருவராக யாழ்ப்பாணம் ஸ்ரீகதிவேலு சுவாமிகளை எடுத்தாளுவது காணலாம். இதில் ஸ்ரீ கதிர்வேலு சுவாமிகள் ஒரு மூதாட்டிக்கு இரசவாத சக்தியால் பத்து நாட்களாக ஒரு ரூபாய் நாணயம் கொடுத்த செய்தி சுட்டப்பட்டுள்ளதுடன் பாரதியாருக்கு குண்டலினி யோகத்தை பாரதியாருக்கு அறிமுகப்படுத்தியவராகவும் குறிப்பிடப்பட்டுள்து. எனினும் இவர் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்தவரா? அல்லது யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவரா? என்பதற்கான ஆதாரங்கள் எதுவும் கிடைத்திலது. இது தவிர இவ்விரு நூல்களினுடாகவும் ஸ்ரீ கதிர்வேலு சுவாமிகளே பாரதியார் குறிப்பிட்ட யாழ்ப்பாணத்துச் சுவாமிகள் என்பதனை நிறுவ போதிய ஆதாரங்கள் வழங்கியதாயில்லை. அதேவேளை பாரதி போற்றிய யாழ்ப்பாணத்துச் சுவாமி யார்; என்ற தலைப்பில் ஞானகுமாரன் எழுதிய தொடர் கட்டுரையானது தொண்டமனாறு செல்வச்சந்நிதியான் ஆச்சிரம வெளியீடான

ஞானச் சுடரில் அருளம்பல சுவாமிகளை சான்றுகளுடன் இனங்காட்டிய வகையில் 2007 ஐப்பசி, கார்த்திகை மாதமலர்களில் வெளிவந்தமை சுட்டுதற்குரியதாகும்.

யாழ்ப்பாணத்துச் சுவாமிகளான அருளம்பல சுவாமிகள் 1942ல் சமாதியடைந்தபோது அவர் இந்தியாவிலிருந்து கொண்டு வந்த சமாதிக்கான பொருட்களைப் பயன்படுத்தி அவரது அன்பர்களால் கருங்கல்லான சமாதியாலயமானது அமைக்கப்பட்டது. அறுபது வருடங்களுக்குப் பிற்பட தென்னிந்தியாவில் வாழ்ந்துவருகின்ற சுவாமி அருளானந்தாவின் தலைமையில் சமாதியாலயம் புதுப்பிக்கப்பட்டு 25.11.2004ல் குடமுழுக்குச் செய்யப்பட்டது. அன்றைய தினமே "யாழ்ப்பாணத்து மௌனகுருவின் சரித சுருக்கம் - மீண்டும் அருள் தர வந்தேன்" எனும் தலைப்பில் சுவாமி அருளானந்தாவினால் ஒரு நூல் வெளியிடப்பட்டது (அருளானந்தா சுவாமி-2004). இந்நூல் மீண்டும் பாரதியின் ஞானகுரு அருளம்பல சுவாமிகளே என்பதனை வலியுறுத்துவதாக அமைந்தது. இந்நூல் பெரிதும் ஞானகுமாரனால் எழுதப்பெற்ற 'பாரதி போற்றிய அருளம்பலசுவாமிகள்' எனும் நூலின் கருத்தம்சங்களையே பெரிதும் எடுத்தாண்ட வகையில் விளங்கிய போதிலும் ஸ்ரீ அருளம்பல சுவாமிகள் வழிபாட்டிற்கான அஸ்டோத்திர நாமாவழி, ஸ்ரீ அருளம்பலசுவாமிகள் வழிபாட்டிற்கான 108 நாம அர்ச்சனை ஆகியனவும் இணைந்து அமைந்துள்ளமை நோக்கத்தக்கதாகும். 2006ம் ஆண்டு வைகாசி மாதத்தில் வெளியான ஆத்மஜோதி மாத இதழில் 'மகாகவி பாரதி போற்றிப் பாடிய யாழ்ப்பாணத்துச் சுவாமி இவரே' எனும் எட்டுப் பக்கக் கட்டுரை ஒன்று வெளியானது (ஆத்ம ஜோதி - 2006-23-29). இதில் பாரதி போற்றிய யாழ்ப்பாணத்துச் சுவாமி வியாபாரி மூலையைச் சார்ந்த அருளம்பல சுவாமிகளே என்பதனை சுருக்கமாகவும் தெளிவாகவும் எடுத்து விளக்கி நின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற சைவ விவகாரக் குழுவின் பதினெண்காவது இதழான நல்லைக்குமரன் மலரில் 'யாழ்ப்பாணத்து ஆறுமுக சுவாமிகள்' என்ற ஏழு பக்கக் கட்டுரை ஒன்று மறைந்த கலாநிதி குணராசாவால் வரையப்பட்டிருந்தது (குணராசா,க-2006). இதே கட்டுரையானது சில படங்களையும் இணைத்து சிறு நூலாக 'பாரதியின் ஞானகுரு யாழ்ப்பாணத்து ஆறுமுக சுவாமி' என்ற தலைப்பை முகப்புப்பட்டையில் தாங்கியவாறு யாழ்ப்பாணத்து ஆறுமுக சுவாமி அறக்கட்டளை சபையினால் வெளியிடப்பட்டது (குணராசா, க-2006). எனினும் புத்தகத்தின் தலைப்பானது 'யாழ்ப்பாணத்து ஆறுமுக சுவாமி' என உள்புறத்திலும் நூல்விபர அட்டவணையிலும் குறிப்பிட்டுள்ளமை அவதானிக்கத்தக்கதாகும். இத்தலைப்பே நல்லைக்குமரன் மலரிலும் சுட்டப்பட்டிருந்தமை கவனிக்கத்தக்கதாகும். இந்நூலின் பிரசுரத்திற்கு பிற்பட திரு. க. சந்திரமௌலீஸ்வரன் தினக்குரல் நாளாந்தப் பத்திரிகையில் நான்கு வார இதழ்களில் தொடர்ந்து 'பாரதியார் போற்றும் யாழ்ப்பாணத்துச் சுவாமி யார்?' எனும் தலைப்பில் ஆராய்ந்துள்ளமை நோக்கத்தக்கதாகும் (சந்திர மௌலீஸ்வரன் - தினக்குரல்-17.12.2006 24.12.2006 31.12.2006 7.1.2007). இவ் ஆராய்ச்சியும் தொடர் கேள்வியினையும் எழுப்பியதாக அமைந்ததே தவிர முழுமையான தகவல்களினை வழங்கியதாகத் தெரியவில்லை.

பாரதியினால் புகழ்ந்து பாடப் பெற்ற யாழ்ப்பாணத்துச் சுவாமி யார்? எனும் கேள்வியினை இ. ந. கந்தசாமி என்பவர் 1961 ஆகஸ்ட் 'ஸ்ரீ லங்கா' இதழில் 'ஞானம் வளர்த்த புதுவை' எனும் கட்டுரையில் எழுப்பியிருந்தார் என்பதனை ஏலவே சுட்டியிருந்தோம். இதற்குப் பதிலாக பொ. சபாபதிப்பிள்ளை அவர்கள் 'ஸ்ரீ லங்கா' மாத இதழில் 1962 ஏப்பிரல் 'பாரதியின் ஞான குருவான யாழ்ப்பாணத்துச்சாமி' எனும் தலைப்பில் ஒரு கட்டுரையினை வெளியிட்டார். இதுவே

அருளம்பலசுவாமிகளே 'யாழ்ப்பாணத்துச்சாமி' என்பதனை முதற்தடவையாக வெளிக் கொணர்ந்த தென்பதும் வரலாற்று உண்மை யென்பது வரலாற்று ரீதியாக பார்க்க முற்பட்ட சந்திரமௌலிஸ்வரனுக்குத் தெரியாமற் போனது துரதிஸ்டவசமானதாகும். மேலும் ஈழத்து முற்போக்கு எழுத்தாளர் சங்கம் அருளம்பல சுவாமிகளே யாழ்ப்பாணத்துச்சாமி என எடுத்தாண்டமை ஒரு திருப்புமுனையாக அமைந்த போதிலும் முழுமையான ஆய்வு நிலையாக அன்றைய காலகட்டத்தில் கைலாசபதி போன்றோரின் எழுத்துக்கள் அமையவில்லை என்பது 1992ல் யாழ்ப்பாணத்துச்சுவாமிகள் சபையினரால் வெளியிடப் பெற்ற 'பாரதி போற்றிய அருளம்பல சுவாமிகள்' எனும் நூலில் எடுத்தாளப்பெற்றமையினையும் சந்திரமௌலிஸ்வரன் அறியவில்லைப் போலும். ஏனெனில் அவ்வாறு நூல் வெளிவந்த தென்பதனை எவ்விடத்திலும் இக் கட்டுரையாளர் அறிந்திருக்கவில்லை யென்பது புலனாகின்றது. சபாபதிப்பிள்ளையின் 'புற்றளைக்கரசே' எனும் நூலுக்குப் பிற்பட பல கட்டுரைகளும் நூல்களும் இது தொடர்பில் வெளியானது தெரியாமற் போனது கட்டுரையாளரின் இவ்விடயத் தேடல் நிலையின் போதாத்தன்மையை வெளிப்படுத்துகின்றதெனலாம்(*பருத்தித்துறை பிரதேச மலர்-1999, பேராசிரியர் சண்முகதாஸின் மணி விழா மலர்-2001*).

எனினும் இக்கட்டுரையாசிரியர் தனது கட்டுரையில் குணராசா குறிப்பிட்ட கருத்துக்களை சீர்தூக்கி நோக்கும் தன்மை அவர் குறிப்பிட்ட செய்திகளையோ தகவல்களையோ ஆதாரமின்றி எடுத்தாள்வது அதன் பொருத்தமுடைத்தன்மைக்குரியதா எனும் வகையில் தனது கருத்துக்களை முன்வைப்பது நுண்ணியதான ஆராய்ச்சிப் போக்கிற்குரியதாகும். இலங்கையிலிருந்து இந்தியாவிற்குச் சென்ற பலரையும் யாழ்ப்பாணத்தார் என இந்தியர்கள் அழைப்பது சாதாராணமான தொன்றே. இவ்வகையில் கலட்டியிலிருந்து சென்று அற்கு சமாதியடைந்த ஆறுமுகசாமியையும்யாழ்ப்பாணத்துச்சாமிஎன அங்குள்ளவர்களால் அழைக்கப்பட்டிருத்தல் வியப்பிற்குரியதொன்றல்ல. இக்கருத்தினைக் கட்டுரையாளர் நியாயமானதெனவும் மரபுரிமையானதுமென எடுத்தாள்வது ஏற்கக்கூடியதே(*சந்திர மௌலிஸ்வரன் - தினக்குரல்-07.01.2007*). அதேவேளை அதற்காக அவரை யாழ்ப்பாணத்தச் சாமியாரென எடுத்தாள்வது கேள்விக்குரியதெனக் குறிப்பிடுவது பொருத்தமானதாகும். புதுவையில் ஆறுமுகசாமியைப் பாரதி சந்திக்க வைப்பதாக எடுத்தாளும் கட்டுரையாசியர் 'குணராசாவின் எழுத்தின் நவீனத்துவத்தின் புனைவியல் யுக்திகள் மேலோங்கி நிற்பதை அவதானிக்க முடிகின்றது. யாழ்ப்பாணத்து ஆறுமுகசுவாமிகளின் வைப்புக்கள் கற்பனை கலந்த கருத்தியலாகவே அமைந்துவிடுகின்றது' எனச் சுட்டுவது கட்டுரையாளனின் ஆய்வின் தர்க்கநிலைப்பாட்டைப் புலப்படுத்துகின்றது. மேலும் ஆதாரமற்ற அடிப்படையில் கட்டியெழுப்பப்பட்ட முயற்சியாகவே இது எடுத்தாளப்படலாம். இதனாலேயே குணராசாவின் முயற்சியை சந்திரமௌலிஸ்வரன் 'தனக்கு உறவினரான யாழ்ப்பாணத்து ஆறுமுகசுவாமியை பாரதியாரின் யாழ்ப்பாணத்துச் சுவாமியுடன் இனங்காட்டிப் பெருமை தேடிக் கொள்ள மேற்கொண்ட பகீரதப்பிரயத்தன முயற்சி யென்றே குறிப்பிடலாம்' எனச்சுட்டுதல் இங்கு குறிப்பிடத்தக்கதாகும். அதே வேளை குணராசா தனது தேடலுக்கு முன்னோடிகளாக அமைந்த விடயங்களைக் குறிப்பிட்டிருக்க வேண்டும் எனும் கட்டுரையாளரின் கருத்தானது ஒருவகையில் இக்கட்டுரையாளருக்கும் பொருத்திப் பார்த்தல் பொருத்தமானதேயாகும்.

சண்தொலைக் காட்சியில் ஒளிபரப்பப் பெற்ற சித்தர்கள் பற்றிய விவரணச் சித்திரத்தில் கதிரவேலு சுவாமிகளின் சமாதி ஆலயத்தைக் காண்பித்து அதுவே

பாரதியார் குறிப்பிட்ட யாழ்ப்பாணத்துச் சாமியாரெனச் செய்தித் ொதகுப்பாளரினால் ஆவணி 2011ல் குறிப்பிடப்பட்டமை கவனிக்கத்தக்கதாகும். இத் தகவலானது ஏலவே முருகேசனால் எடுத்தாளப்பட்ட கருத்தினடிப்படையிலேயே அமைந்தது போல் விளங்கியது. இங்கும் யாழ்ப்பாணச்சாமி யாரென எடுத்தாளப்பட்டமைக்கு எந்தவொரு காத்திரமான ஆதாரம் எடுத்தாளப்படாமை குறிப்பிடத்தக்கதாகும். இத் தன்மைபோலவே இலங்கை அரசாங்கக் கல்வி வெளியீட்டுத் திணைக்கழகத்தின் பத்தாம் வகுப்பு சைவநெறிப் பாடப் புத்தகத்தில் (8ம் பாடத்தில்) எங்கள் ஞானியர் பற்றிக் குறிப்பிடுகையில் கடையிற் சுவாமிகள், செல்லப்பா சுவாமிகள், யோகசுவாமிகள் என்றொரு ஞான பரம்பரையைப் பெற்றுள்ளோம் எனச் சுட்டப்பட்டுள்ளது (சைவநெறி, பத்தாம் வகுப்பு-1985-40). இலங்கையிலே இத்தகைய நானநிலையை அடைந்த ஒரு ஞான பரம்பரைக்கு வித்திட்டவர் யாழ்ப்பாணத்துக் கடையிற்சுவாமிஎன்பவராவர் என ஒரு பந்தியில் ஆரம்பித்துவிட்டு, பாரதி அறுபத்தாறில் வரும் யாழ்ப்பாணத்துச் சாமி பற்றிய பாடலடியான,

**...குவலயத்தின் விழிபோன்ற யாழ்ப்பாணத்தான்**
**தேவிபதம் மறவாத தீர ஞானி**
**சிதம்பரத்து நடராஜ மூர்த்தி யாவான்**
**பாவியரைக் கரையேற்றும் ஞானத்தோணி**
**பரமபத வாயிலெனும் பார்வையாளன்**
**காவி வளர் தடங்களிலே மீன்கள் பாயும்**
**கழனிகள் சூழ் புதுவையிலே அவனைக் கண்டேன்"**
**"தங்கத்தாற் பதுமை செய்தும் இரதலிங்கம்**
**சமைத்துமவற் றினிசன் தாளைப்போற்றும்**
**துங்கமுறு பக்தர் பலர் புவிமீதுள்ளார்**
**தோழரே எந்நாளும் எனக்குப் பார்மேல்**
**மங்களஞ் சேர் திருவிழியால் அருளைப் பெய்யும்**
**வானவர் கோன் யாழ்ப்பாணத்தீசன் தன்னைச்**
**சங்கரரெனன் றெப்போதும் முன்னே கொண்டு**
**சரணடைந்தால் அதுகண்டீர் சர்வசித்தி"**

எனும் பாடலினைப் பிரசுரித்துள்ளனர். இதனைப் படிப்பவர்களுக்கு கடைச் சுவாமிகளும் யாழ்ப்பாணத்துச் சுவாமிகளும் ஒருவரோ எனும் மயக்கநிலைக்கு இட்டுச்செல்ல வாய்ப்பாயுள்ளது. இந் நூலைவிட வேறு எவரும் இவ்வாறான கருத்தினைக் கொண்டிருந்ததாகத் தெரியவில்லை. பாடநூற் குழுவினர் எவ்வகையில் இவ்வாறான கருத்தினைப் பெற்றுக் கொண்டார்களென்பதற்கும் தக்க ஆதாரமில்லை. இவ்வாறான கருத்தின் சாத்தியத் தன்மையை ஆராய்ந்து நோக்கின் யாழ்ப்பாணத்துக் கடைச்சுவாமிகள் யாழ்ப்பாணத்துச் சுவாமிகளாக இருத்தல் அசாத்தியமென்பனைக் காணலாம். கடைச் சுவாமிகளின் பிறந்த ஆண்டு தெரியாவிடினும் அவர் ஏறத்தாள 1862ம் ஆண்டளவில் இலங்கைக்கு வந்தவரென்பதும் முப்பது ஆண்டுகள் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்ததுடன் 1891ம்புரட்டாதிச்சதயத்தில்சமாதியடைந்தமை அறியத்தக்கதாகும் (குலரத்தினம், கா.சி-1975-14). அதேவேளை மார்கழி 1882ல் பிறந்த பாரதிக்கு கடைச்சசுவாமிகள் சமாதியடைந்தபோது ஒன்பது வயதாகவே இருந்திருக்க வேண்டும். பாரதி புதுவையில் வாசம் செய்த காலம் 1908 இலிருந்து பத்து வருடங்களே. எனவே ஷபுதுவையில் அவனைக் கண்டேன்; எனும் பாரதியின் கூற்றுக்கு இந் நிகழ்வு பொருந்தாதென்பது தெட்டத் தெளிவாகும். அதேவேளை தற்சமயம் பயன்பாட்டிலுள்ள இலங்கை அரசாங்க வெயியீட்டுத் திணைக்கழகத்தின் 11ம் தரம் சைவநெறிப் புத்தகத்தில் (14ம் அத்தியாயத்தில்) முற்படக் குறிப்பிட்ட கருத்திலிருந்து மாற்றமுற்றதுடன் யாழ்ப்பாணத்துச் சுவாமிகள் பற்றி பாரதியார் பாடிய இரு பாடல்களையும் குறிப்பிட்டு யாழ்ப்பாணத்துச் சுவாமியார் பருத்தித்துறையில் வியாபாரிமூலையில் வாழ்ந்த அருளம்பல சுவாமிகளா? அல்லது கலட்டியில் வசித்த ஆறுமுக சுவாமிகளா? எனக் கேள்வி எழுப்பி அறிஞர்களிடையே வேறுபட்ட கருத்துண்டென எடுத்தாளப்பட்டமை காணலாம்(சைவநெறி, தரம் 11-2009- 89-90).

இதுவரையில் நோக்கிய கருத்துக்களிலிருந்து பாரதியாரின் யாழ்ப்பாணத்துச் சுவாமியுடன் இனங்காட்டப் முற்பட்ட கதிரவேலு சுவாமிகளும் பொருத்தமானவர்களாக அமையவில்லையென்பது தெளிவிற் குரியதாகும். பாரதியாரின் யாழ்ப்பாணத் துச்சுவாமி அல்வாய் வடக்கு வியாபாரி மூலையைச் சார்ந்த அருளம்பல சுவாமிகள் என்பதில் ஐயமில்லை. இதனையே "பாரதி போற்றிய அருளம்பல சுவாமிகள்" நூலில் 'தயக்கம் வேண்டாம்' எனும் உப தலைப்பின் கீழ் "இதுகாறும் கூறிய கருத்துக்கள் அனைத்தையும் ஒருங்கே கொள்ளும் போது பாரதியாரால் பாடப்பட்ட யாழ்ப்பாணத்துச் சுவாமிகள் அருளம்பல சுவாமிகளே எனக் கொள்வதில் தவறாகாது எனக் கொள்ளும் முடிவிலே எந்தவித தயக்கமும் கொள்ள வேண்டியதில்லை யன்றோ? தக்க தடைகளும் சான்றுகளுடன் கூடிய மறுப்புக்களும் இருப்பின் அறிஞர் அவற்றைக் கூறுவதற்குத் தயங்க வேண்டா" (ஞானகுமாரன்.நா-1992-41)எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. அருளம்பல சுவாமிகள் சமாதியடைந்து எழுபத்தைந்து ஆண்டுகள் பூரணமாகின்ற இவ்வாண்டிலாவது யாழ்ப்பாணத்துச் சுவாமிகள் அருளம்பல சுவாமிகளே எனும் முடிவில் ஆய்வாளர்கள் தெளிவுடையவர்களாகுக.

**உசாத்துணை நூல்கள்**


1. அருளானந்தா,சுவாமி, யாழ்ப்பாணத்து மௌனகுருவின் சரித சுருக்கம் - மீண்டும் அருள் தர வந்தேன் 2004, வியாபாரிமூலை, பருத்தித்துறை. குணராசா க, யாழ்ப்பாணத்து ஆறுமுக சுவாமிகள் யாழ்ப்பாணத்து ஆறுமுக சுவாமிகள் அறக்கட்டளை சபை ஆகஸ்ட் 2006
2. குலரத்தினம், கா.சி, கடையிற்சுவாமிகள், மில்லைட் வெளியீடு, யாழ்ப்பாணம் 1975
3. சைவநெறி, பத்தாம் வகுப்பு, கல்விவெளியீட்டுத் திணைக்கழகம், கொழும்பு, 1985
4. சைவநெறி, தரம் 11, கல்வி வெளியீட்டுத் திணைக்கழகம், கொழும்பு, பதிப்பு -3, 2009
5. ஞானகுமாரன்.நா., பாரதி போற்றிய அருளம்பல சுவாமிகள் 1992 யாழ்ப்பாணத்துச் சுவாமிகள் சபை, பருத்தித்துறை.
6. ------------------------------ (பதிப்பாசிரியர்) சி.வே.அருளம்பல சுவாமிகள் அருளிச் செய்த மண் விண் வினாவிடை 2000 இந்துசமயப் பேரவை யாழ்ப்பாணம்
7. முருகன்.சி.எஸ். 'பாரதி கண்ட சித்தர்கள்' 2002 குறிஞ்சி, சென்னை
8. ---------------------- 'புதுச்சேரி சித்தர்கள்' 2003 கிருஸ்ணா பிரஸ், சென்னை
9. பாரதியார் பாடல்-பாரதி அறுபத்தாறு
10. அம்பிகைபாகன், வீரகேசரி பத்திரிகை, 31.1.1982, 07.02.1982
11. இராமச்சந்திரன்.க, பாரதியார் யார்? ஆத்ம ஜோதி 15.5.1963
12. ---------------- ஆத்ம ஜோதி மாத இதழ் 'மாகாகவி பாரதி போற்றிப் பாடிய யாழ்ப்பாணத்துச் சுவாமி இவரே' சித்திரை 2006 ஒளி 13 பு 23-29
13. ஈழத்துச் சோமு, 'புதுயுக எழுச்சி பாடும் ஈழத்து இலக்கிய மாநாடு' ஈழநாடு -5.5.63

14. குணராசா க, யாழ்ப்பாணத்து ஆறுமுக சுவாமிகள், நல்லைக்குமரன் மலர் இதழ் 14- 2006

15. கைலாசபதி.க, ஞானியரின் நட்புறவு-தினகரன் 7.5.63

16. சந்திர மௌலிஸ்வரன், பாரதியார் போற்றும் யாழ்ப்பாணத்துச் சுவாமி யார்? தினக்குரல்-17.12.2006 24.12.2006 31.12.2006 7.1.2007

17. சிவத்தம்பி.க, இலக்கிய வளர்ச்சியில் இன்னொரு கட்டம்- தினகரன் 7.5.63

18. சிவஞான சுந்தரம், மக்கள் இலக்கிய விழா - ஈழநாடு – 6.5.63

19. ஞானபாஸ்கரன்.க, யாழ்ப்பாணத்துச் சாமியார் பருத்தித் துறையை சேர்ந்தவரே –சுதந்திரன் - 19.5.1963

20. பரசுராம மூர்த்தி, பாரதியாருக்கு இமுக்கேற்படுத்தவா பருத்தித் துறையில் மாநாடு? சுதந்திரன்-5.5.63

21. பருத்தித்துறை பிரதேச மலர்(1999)பருத்தித்துறை, பேராசிரியர் சண்முகதாஸின் மணி விழா மலர் (2001) நெல்லியடி.